**15.07.2026** **STC No. 13/2023** **DW1. ஆண்டனி மேரி**

கடந்த 20.03.2025–ம் தேதி விசாரணை செய்யப்பட்டு முடிந்த நிலையில் இன்று மேற்படி சாட்சி நீதிமன்ற கேள்விக்காக விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 15.07.2026.**

**நீதிமன்ற கேள்வி**

1. நான் முதல்விசாரணையின் பொழுது எனது அம்மா புகார்தாரரின் மருமகன் ஹோர்மிஸ் மூலம் அவரது நண்பர் ரூஸ்வெல்ட் பெர்னான்டோவிடம் இருந்து வாங்கிய 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கடனுக்கு 19 லட்சத்து 43 ஆயிரத்து 30 ரூபாய் கொடுத்துள்ளேன் என்றால், சரிதான்.

2. வங்கிக் கணக்கு எண் 97215021891 என்ற வங்கிக் கணக்கு யாருடையது என்றால், ரூஸ்வெல்ட் பெர்னான்டோவினுடையது. 777336221 என்ற எண் யாருடையது என்றால், இவ்வழக்கின் புகார்தாரர் குழந்தை தெரசாவினுடையது.

3. 06.03.2017–ம் தேதியன்று 12ஆயிரம் ரூபாய் பரிவர்த்தனை செய்ததில் "சீட்டு மார்ச்" என குறிப்பிடப்பட்டிருந்ததை சாட்சியிடம் கேட்ட பொழுது அது எனது Reference–க்காக குறிப்பிட்டதாக கூறுகிறார்.

4. 05.10.2017–ம் தேதியன்று சீட்டு Transfer என குறிப்பிடப்பட்டிருந்ததை சாட்சியிடம் கேட்ட பொழுது அது எனது Reference–க்காக குறிப்பிட்டதாக கூறுகிறார். நான் புகார்தாரரிடம் சீட்டு போட்டிருந்தேனா என்றால், இல்லை.

5. 05.07.2017–ம் தேதியன்று 12,800/– ரூபாய் பரிவர்த்தனைகளில் ஏன் புஷ்பா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவரிடம் வாங்கி அனுப்பியதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். 06.10.2017ம் தேதியன்று 15,800/– ரூபாய் பரிவர்த்தனைகளில் ஏன் புஷ்பம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவரிடம் வாங்கி அனுப்பியதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன்.

6. 19.09.2018–ம் தேதியன்று 20 ஆயிரம் ரூபாய் பரிவர்த்தனையில் ஏன் Suba Interest என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சுபாவிற்கு அந்த பணத்தைக் கொடுக்க வேண்டி அவரது அம்மா வங்கிக் கணக்கிற்கு அனுப்பியதால் Suba Transfer என குறிப்பிடப்பட்டுள்ளது.

7. 06.09.2018–ம் தேதியன்று 46,800/– ரூபாய் 777336221 என்ற வங்கிக் கணக்கிற்கு பரிவர்த்தனை செய்யும் பொழுது "செப்டம்பர் சீட்டு" என குறிப்பிடப்பட்டுள்ளது ஏன் என்றால், எனது reference–க்காக குறிப்பிடப்பட்டுள்ளது.

8. 09.07.2018, 08.04.2019 ஆகிய தேதிகளின் ஏன் சீட்டு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், எனது reference–க்காக குறிப்பிடப்பட்டுள்ளது. 15.12.2018, 08.11.2018, 06.03.2019, 06.02.2019, 05.12.2019, 05.12.2019, 05.11.2019, 05.10.2019, 05.03.2020 ஆகிய தேதிகளில் 97215021891 என்ற வங்கிக் கணக்குக்கு பணம் அனுப்பும் பொழுது ஏன் "சீட்டு" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவரிடம் வாங்கிய பணத்தை திரும்பக் கொடுத்துள்ளேன்.

9. ரூஸ்வெல்ட் பெர்னான்டோவிடம் நான் சீட்டு போட்டிருந்தேனா என்றால், இல்லை. ஏன் ரூஸ்வெல்ட் பெர்னான்டோ வங்கிக் கணக்கிற்கு பண பரிவர்த்தனை செய்யும் பொழுது சில பரிவர்த்தனையில் புஷ்பம் எனவும் ஆண்டனி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், புஷ்பம் என்பவரிடம் வாங்கி செலுத்திய தொகை என்பதால் அவரது பெயரை குறிப்பிட்டுள்ளேன்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.